# திறவுகோல்

2052
கார்த்திகை
மாத இதழ்




வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# உங்கள் குழந்தைகளை வடிவமைக்கும் சிற்பிகள்

நம் குழந்தைகள் வாழ்வதும், வீழ்வதும் விதியின் கையிலோ, ஜோதிடத்தின் கையிலோ இல்லை. அது பெற்றோர்கள் கையில் தான் உள்ளது.

குழந்தை பிறந்தது முதல் நினைவு தெரியும் வரையில் அது நம்மை உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருக்கிறது. நாம் சொல்வதை அது வேதவாக்காக எடுத்துக் கொள்கிறது.

ஆனால் நம்மில் சிலரோ, இதனைப் புரிந்து கொள்ளாமல் போனை எடுக்கும் குழந்தையிடம், ‘வீட்டில் அப்பா இல்லை’ என முதல் பொய்யை சொல்லச் சொல்லி அவர்கள் நேர்மையை சிறு வயதிலேயே கொன்று விடுகிறோம்.

இன்னும் சிலர் குடி, புகை, கணவன் மனைவி சண்டை போன்ற விஷயங்களை குழந்தையின் முன்னே நிகழ்த்தி அவர்கள் ஒழுக்கத்தையும், மரியாதையையும், ஏன் முன்னற்றத்தையும் கூட அழித்து விடுகிறார்கள்.

பொதுவாக குழந்தைகளை நாம் நினைக்கும் படியெல்லாம் வளர்ப்பது கடினம். நாம் நடந்து கொள்ளும் படியே அவர்கள் வளர்வார்கள் என்பது தான் உளவியல் ரீதியாக அனைவரும் கண்ட உண்மை.

நீங்கள் அடித்தால் அவர்களும் அடிப்பர், நீங்கள் படித்தால் அவர்களும் படிப்பர்.

நீங்கள் படுக்காமல் அவர்களை தூங்க வைக்க முடியாது, நீங்கள் தொலைக்காட்சியை பார்த்து கொண்டு அவர்களை படிக்க சொல்ல முடியாது.

சச்சின் டெண்டுல்கர் பலருக்கு ரோல் மாடலாக இருக்கலாம், ஆனால் அவரின் ரோல் மாடல் அவர் தந்தையே. சச்சின் மட்டும் அல்ல, உலகின் பெரும்பாலான சாதனையாளர்களிடமும் நீங்கள் இந்தப் பதிலையே கேட்க முடியும்.

இந்த வகையில் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று உள்ளது. அதாவது உங்கள் குழந்தைகளை உங்களைத் தவிர யாரையும் ரோல் மாடலாக எடுத்து கொள்ள அனுமதிக்காதீர்கள்.

ஏனெனில் அவர்கள் ரோல் மாடலென நினைக்கும் அந்த நடிகர் வருங்காலத்தில் பாகிஸ்தான் தீவிரவாதி ஆகலாம். கிரிக்கெட் வீரர் match fixing குற்றவாளி

ஆகலாம். பாப் சிங்கரோ குழந்தை பாலியல் வன் கொடுமை குற்றவாளி என பிற்காலத்தில் அறியப்படலாம். ஒருவேளை அரசியல்வாதியாக இருந்தால் ஊழல் குற்றவாளி எனத் தெரிய வரலாம். எனவே அந்த ஏமாற்றத்திற்கு அவர்களை ஆளாக விடாதீர்கள்.

மேலும் நேரில் பார்க்கும் தன் பெற்றோரையோ, ஆசிரியரையோ விட புத்தகத்திலோ திரையிலோ பார்க்கும் மனிதர்களால் பெரிதான தாக்கத்தை ஒரு குழந்தையின் மனதில் நிகழ்த்தி விடவே முடியாது.

மொத்தத்தில் நம் குழந்தைகளுக்கு நாமே சிறந்த முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டுவோம்.

ஆம்! உங்கள் குழந்தைகளை வடிவமைக்கும் சிற்பிகள்...

அது நீங்க தாங்க!

–

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்

---



அடர்வனத்தின் நடுவே
சிறுபாதை.

அதுபோலத் தான்
பல கவலைகளுக்கு நடுவே
சிறு மகிழ்ச்சியும் இருக்கும்
இரண்டும் நம்பிக்கையின்
வழித்தடங்கள்.

–

ஆனந்தன்
திருப்பூர்.

# தந்தை

தோலில் சுமந்து வெறும் - காலில்
நடந்து உழைப்பவன் தந்தை!

தேனீக்கள் அயராது உழைத்து - சுவைமிக்க
தேன் கூட்டை தருகிறது!

அதுபோல் தந்தை கடின - உழைப்பால்
இன்பச்சுவை வாழ்வு தருகிறார்!

தந்தையில்லா வாழ்வு இலக்கணமில்லா - மொழி
போன்றது அழகற்று போகும்!

கதிரவனின்றி பயிர்கள் இல்லை - தந்தை
இன்றி நம் உயிர்கள் இல்லை!

இரவாய் நானிருக்க ...
முழுநிலவாய் தந்தை இருக்க ...
இலட்சியமாய் நட்சத்திரங்கள் இருக்க ...
என் வாழ்வு ஒளிவீசுகிறது!

தந்தை அன்பறிந்து அவரை - பின்பு
காப்பதே நம் உயரிய பண்பு!

வானிற்கு எல்லையில்லை - தந்தையின்
அன்பிற்கு ஈடுயினையேயில்லை!

தந்தை வாழ்க ...

–

நன்றி
இராமமூர்த்தி வெங்கட்

# நாளைக்கென

எடுத்து வைக்காதே!
நான் கெடாமல்
இருப்பேனென்பது
நிச்சயமில்லை.
/

நான் வர தாமதமாகும்
அதுவரையில்
உதிராத என்நினைவுகளைப்
புத்தகமாய்
வாசித்துக் கொண்டிரு.
/

என்னைத் தூக்கிச் செல்ல
கூட்டமாய் வந்திருக்கும்
எறும்புகளிடம்
நான் பிணமான செய்தியை
சொன்னது யாரோ...?
/

கனமழையோ சிறுதூறலோ
சிறகால் சாரலை
சிலுப்பிப் போகிறது பறவை.

/
நிறுத்திக் கொள்ள
முடியாது.
நிறுத்துவதென்பது
என்னால்
ஆகாதவொன்று.
அப்படியொருநாள்
கவிதையின்றி
ஒருநாள்
கடக்குமேயானால்
நான் மரணித்திருப்பேன்
என்பதை
நீங்கள் எல்லோரும்
அறிவீராக...!
/

அறைக்கதவை மூடிவிட்டு வா
நாம் காதலிப்பதை இருட்டுதானே
பார்த்தால் பார்த்துக் கொள்ளட்டும்.
/

பார்வையில்
அகப்படாத போதிலும்
அகப்பட்ட காற்றை
நழுவாதபடி
இறுக்கிப் பிடித்திருக்கிறேன்
கைகளில்.
/

உன்னில் தொலைகிறேனெனில்
ஒவ்வொரு நொடியும்
கரையயெனக்குச் சம்மதமே!
/

இனிப்பை
விரும்பிச் சுவைக்கும்
குழந்தையிடம்
முத்தம் வாங்கினேன்.
என் கன்னமெல்லாம் தித்திப்பு.
/

கொண்டு வந்தவனை
வீராப்பில் விரட்டி விட்டேன்.
இல்லாதவனிடம் கையேந்தி
நிற்கிறேன்.
/

கவிதைகளில் வரிகளைத்தான்
விதைக்கிறேன்.
நீங்கள் வாசிக்கையில்

அதை வலிகளாய்
மாற்றிவிடுகிறான் ஆண்டவன்.
/

நான் மரமாவதும் அதில்
நீ பறவையாய் வந்தமர்வதும்
காலம் நமக்களித்த காதல்வரம்.
/

விடியவிடிய
விழித்திருந்துஎழுதிய
காதல் கடிதத்தை
வாங்காமலே சென்றுவிட்டது
நிலா.
/

சொல்லத் தெரியவில்லை
சொல்லிக் கொண்டிருக்கிறாய்.
கேட்க விருப்பமில்லை
கேட்டுக் கொண்டிருக்கிறேன்.
/

வாகனத்தில் நசுங்கிய
நத்தையின் மரணத்தை
தற்கொலை என்பது அபத்தம்.
/

இழவு வீட்டில்
தொடர்ஒப்பாரி.
புதைப்பதா எரிப்பதா எனும்
பெரிசுகளின் விவாதம்.
தப்பாத தப்புஒலி.
இவைகளுக்கு நடுவில்
அசைவற்ற பிணம்.
/

யார் வீட்டுச்செடியாயினும்
எத்தனைப்பூ
பூக்கவேண்டுமென்பதை
காலம்தான் தீர்மானிக்கிறது.
/

பார்வையாளர்களை
தவிர்த்து
அலங்கரிக்கப்படுகிறது
விழாமேடையில்
தரம்பார்த்துப் பார்த்து
இருக்கைகள்.
/

தலைமைக்கென்றும்
முன்னிலைக்கென்றும்
சிறப்புவிருந்தினருக்கென்றும்
விழாக்குழுவினர்க்கென்றும்
தனித்தனியே தகுதிக்கேற்ப
அலங்கரிக்கிறது விழாமேடையில்
பொன்னாடைகள்.
/

பார்வைக்குப் புலப்படாத
பிடிக்குள் சிக்காத
காற்றின் எடையை
ஏற்றயிறக்கமாய்க் காட்டுகிறது
மின்துலாபாரம்.



--
பாரியன்பன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி:
9443139353.

# இதுதான் வாழ்க்கை!

"வாழ்க்கை என்றால் யாது?"
என்று கேட்டேன்:
காதலன் "காதலிப்பது" என்றான்;
நடிகன் "நாடகம்" என்றான்;
பணக்காரன் "சேமிப்பு" என்றான்;
"காலையில் எழுவதும்,
கண்கள் விழிப்பதும்,
கழிவறைக்கு செல்வதும்,
இனிப்பை தேடுவதும்,
இருப்பதை உண்பதும்,
இருமலால் தவிப்பதும்,
மருத்துவரிடம் செல்வதும்,
மனதை வருத்துவதும்,
மாற்றத்தை நினைப்பதும்,
வேலைக்கு செல்வதும்,
வேறுவழியின்றி தவிப்பதும்,
வேதனையில் துடிப்பதும்,
வாடகை கொடுப்பதும்,
வாகனம் வாங்குவதும்,
வட்டிகளை கட்டுவதும்,
எரிபொருள் ஊற்றுவதும்,
எரிச்சல் அடைவதும்,
ஏமாந்து நிற்பதும்,
சக்தியை இழப்பதும்,
சாதியை மறுப்பதும்,
சத்தியத்தை மறப்பதும்,
இருட்டில் படுப்பதும்,
இருண்டே கிடப்பதும்,
இல்லாமல் போவதும்.",
என்கிறான் ஏழை;
ஏழைக்கு மட்டுமே புரிகிறது
எல்லோருக்குமான வாழ்க்கை!

–
வெ.ஹேமந்த் குமார்,
ஈரோடு



P. சாதனா,
ஆறாம் வகுப்பு,
விருதை.



# சேமிக்கப் பழகு

சேமிப்பை மறந்த மானிடரானோம்
மழை நீரைக் கூட
சேமிக்க மறந்தே
போனோம்

தேவையற்றதை சேமித்து
சேமித்தே
பலதையும் வங்கியில் இட்டு
பண முதலைகள்
ஆனோம்

தானியங்களின் சேமிப்பை தெரிந்தே
தொலைத்தோம்
மானியங்களின் சிரிப்பை மகிழ்ந்து
ஏற்றோம்
இன்றோ...!
சூனியங்களை அறுவடை செய்தே
வாழ்கின்றோம்

பணமிருந்தால் பலதையும் வாங்கிட
துடித்தோம் - முழு
மனத்தோடு உள்ளூர் உற்பத்தியை
விற்றோம்
இப்போ...!
பணமிருந்தும் மனமுவந்தும்
உண்ண உணவின்றி
தவிக்கிறோம்

தற்சார்பு பொருண்மியத்தை
தாரை வார்த்தோம்
எச்சார்புமில்லா வெளிநாட்டு
பொருண்மியத்தால் மதி மயங்கினோம்
இன்றோ!
தற்காப்புக்கு கூட ஏதுமின்றி
பரிதவிக்கிறோம்

நம் முன்னோர்கள் தானியத்தை
கோபுர கலசத்தில் காக்க
நாமோ!
விதையில்லா தானியத்தில்
நம்மை
முழுமையாய் அர்ப்பணிக்க
இப்போ!
முழுதையும் இழந்தே கையேந்தி
நிற்கிறோம்

பணம் மட்டுமே சேமிப்பு
இல்லையே!
தானியங்களும் சேகரிப்பின்
முதன்மையானதே!
அதை
மறந்து தானே
இன்று
தடுமாறித் தவிக்கிறோம்

உலகமயமாக்கம் நம்மைத்
தனித்தனியே
துரத்தியது
உலகத்தை உள்ளங் கையில் தந்து
உறவுகளை விரட்டிட
செய்தது

கொரோனா வைரசோ நம்மை
தனிமைப்படுத்தி
உறவின் அவசியத்தை
உணவின் தனித்துவத்தை
உணரவைத்தது

உழவை உதறி தள்ளிவிட்டு
கணனியில் புகுந்தே
அற்புதங்கள் செய்தததாக

அலட்டிக் கொண்டோம்

உழுதலை மறந்த மனிதகுலம்
அநாதரவற்றே நிற்கிறது
ஏர்ப்பின்னதே உலகு
இதை
உணர மறுத்தால்
வாழ்வோ சுடுகாடு

பண்டமாற்று முறையில் தானே
மனிதன்
பூரணமாய் வாழ்ந்தான்

பணமாற்று முறையில் தானே
அவன்
தோற்றுப் போனான்

மனமாற்றமதை நேசித்து நேசித்தே
மனிதநேயத்தை
புதைத்தே
வாழ்கிறான்

மீண்டும் உழவை கையிலெடு
மண்ணுயிர்க்கு எல்லாம்
உணவை இடு

சேமிப்பை நம் அடுக்குப்
பானையில்
இருந்தே தொடங்கு

அடுக்குப் பானைகள் நிறைந்து வழிந்து
செழித்தால்
ஏழைகளின் வாழ்வும் மனமும்
சிறக்கும்
வாழ்வின் துயரங்கள் யாவும்
உடைந்தே போகும்

சேகரிக்கப் பழகு
மரபணு மாற்றமில்லாத
நல்விதைகளை

சுவாசிக்கப் பழகு
கந்தகமற்ற
தூய காற்றின்
விசும்பலை

வாசிக்கப் பழகு
மனிதம் காக்கும்
புனித
புத்தறிவு நூல்களை…

நேசிக்க பழகு
இயற்கை உவந்தளித்த
கொடைகளை

பகிர்ந்துண்டு வாழும் கலையை
உந்தன் பரம்பரைக்கும்
கடத்து

பிறர் பசிப்பிணியோடு
இருத்தலை
வேரோடு
பிடுங்கி எறிய
உழைத்திடு

சேமித்தவற்றை பிறருக்கும்
உவந்தளித்தே
மகிழ்ச்சியை
சேமிக்க பழகு

–
ஞா.ரேணுகாசன் (ஞாரே)

# நீ விழிக்கும் காலை

*
நிலவில்லா அடர் இருளில்
தனித்திருக்கும் உயிர்க்கிழித்து
அறையெங்கும் வீசியெறிகிறாய்
சுழலும் மின்விசிறியில்
இலவம்பஞ்சாய்
சிதறித் தவிக்கிறது அது!

*
பிரிவின் கூரிய வாளால்
நீ இரணம் செய்த இரவை
உறங்காமல் வதைக்கிறேன்
உன் இருப்பிட வாசலில்
விபத்துக்குள்ளான கோரசடலமாய்
அது எதிர்ப்படலாம்
கவனமாயிரு
நானற்று நிம்மதியாய்
நீ விழிக்கும் காலையில்!

*
மதிமயக்கும் வசீகரத்தால்
புடைசூழ்ந்து
செழித்த வனமாய்
என் எங்கும் வியாபித்திருக்கிறாய்
துளியும் விலகாதப் பிரியம்
மணங்கமழும் பூக்களை
வண்ணவண்ணமாய்
மார்பினுள் கொழிக்கிறது
சில்லிடும் புன்னகைத் தூறல்கள்
வேர்களில் இராசயன மாற்றங்கள்
நிகழ்த்துகின்றன
மிதமான வெயிலோடு இறுகி
உயிரெங்கும் சிலிர்ப்பூட்ட
நெருங்கிவா விரைந்து அருகில்.

*
நீயற்ற வானைத் துறந்து
கனமழையாய் வீழ்ந்தேன்
அருவியெனப் பெருகும் சோகங்களை
நதிகளின் ஆழத்தில் புதைத்துக்
அலைகளும் நுரைகளுமாய்
கரையெங்கும் ததும்புகிறேன்
இப்பொழுதும் தள்ளிநின்றே
சிறுநண்டுகளாய்
வேடிக்கை செய்கின்றன
வண்ணங்களைத் தூவாத
உன் பொன்வண்டு விழிகள்.

*
எளிதான நிராகரிப்பால்
தீயெறிந்தவண்ணம் உள்ளாய்
தனிமையின் சிதைமேல்
கருகும் இதயத்தின் சுவரெங்கும்
உன் நினைவுகள்
பிரெஸ்கோ ஓவியங்களைப்போல்
அழியாமல் ஒட்டியிருக்கின்றன !

*
வலிந்துபிரிய உறுதிகொண்ட நீ
இறுதியாய் அருந்தி மகிழா
ஒரு குவளைத் தேநீர்
என்முன் மிச்சமுள்ளது
கண்ணீர் நிறைந்துஇன்றும்.

*
எப்பொழுது சந்திப்போமென
எதிர்பார்த்திருந்த தவநாட்களை
அலுத்து
எப்பொழுதாகிலும் சந்திக்க
வேண்டினும்
நிராகரிக்கும் உன் நேசத்தின் சாபம்

வாழ்வதின் துயர் மிகுந்தது.

*

சிலந்தி வளையெனும்
உன் இமைகளின் இழையில்
சுருக்கிட்டு வதைகிறது இதயம்
புன்னகை ஒளிரும்
இதழ்களின் வரிகளில்
புதைகிறது என் ஆருயிர்
ஒவ்வொரு முறையும்
மின்னல் மோதி
பேரழகு பொழிகிறாய்
சொட்ட நனைந்திடும் மரம்நான்
காதலில் மெல்ல அசைகிறேன்
வீதிகளில் பற்றுகிறது மலர்த்தீ
நீ கடலென காத்திரு
அருவி வீழ்ந்து
நதியென வருகிறேன் நான் !

*

தனிமையைக் காய்கிறது
பழுத்த மாலைவெயில்
இதயம் கிழித்துக்
குருதிசொட்டி உதிக்கின்றன
மேற்கில் நட்சத்திரங்கள்
மௌனத்தின் தலையில்
சம்மட்டியால் அடிக்கிறது
பெருகும் இருள்
தெருநாயின் அழுகையில்
ஒன்றிணைகிறது
என் நீர்கொண்ட மேகம்
இருத்தலின் குளத்தில் கல்லெறிந்து
சலனங்களை இரசிக்கிறது
உன் விழிமோதிய தாபம்.

*

நிழலற்றச் சாலையில்
கானலின் பிம்பத்தை
வெறித்து நோக்குகிறேன்
தொலைதூரத்திலும்
தென்படாத உன்வருகை
வெயிலைப் பன்மடங்காய்
கருணையின்றி இறக்குகிறது
இதயத்தில்
மெல்ல உருகும் உயிரை
வியர்வையோடு துடைக்கிறேன்
விழிகளில் பெருக்கெடுக்கிறது
கடலான கொதிநீர்!

## சில்லறை ஒலி

மனங்களற்ற வெளியைக்
கோரவிரல்களால் இறுக்கி
மூச்சுத்திணர கொல்வதில்
பேராசை மிகுந்தது
நிறைந்த புன்னகையையும்
நீண்ட உறவையும்
தீர்மானித்தலில்
முந்திரிக்கொட்டையாகிறது
நெருங்கிய தோழமைகளை
எதிரிகளாக்கி இரசிக்கிறது
பகையை விரட்டி
உடன்பிறப்புகளைப்போல்
மயக்கத்தில் உலாவர நகைக்கிறது
வட்டிக்கடையில் கொழுக்கிறது
கடனாளியின் கால்களைக்
கொடிய நாகமாய் சுற்றி
கடித்துக் குருதிசுவைக்கிறது
சாண் ஏறினால்
முழம் வீழ்த்தி இரசிக்கிறது
முழம் ஏறினால் அதளபாதாளத்தில்
சமாதி செய்கிறது
ஜனனத்தின் மகிழ்விலும்

மரணத்தின் வலியிலும்
திருவிழா கொண்டாடுகிறது
தேர்தல் அவசரத்தில்
வாக்காளர் கரங்களில்
குழந்தையாய் தவழ்கிறது
அடுத்தத் தேர்தல்வரை
ஓடியோளிந்து கண்ணாமூச்சி
ஆடுகிறது
தொழிலாளர் இல்லங்களை
அறவே வெறுக்கிறது
முதலாளிகளின் வீடுகளில்
போதிய வசதியின்றி
நெரிசலில் அவதியாகிறது
மதிப்பையும் மரியாதையையும்
கைவசம் கொண்டு
எப்போதும் பீடுநடையிடுகிறது
கௌரவத்தின் இலக்கணமாகிறது
பூக்களின் நறுமணத்திலும்
சாக்கடையின் துர்நாற்றத்திலும்
வாழக் கற்றிருக்கிறது
நல்ல விலைக்கு
விற்கவும் வாங்கவும்
கலைமகளை நேர்த்தியாய்
தயார்செய்திருக்கிறது
உண்டியல்களில் விதவிதமாய்
பெருகுகிறது
உழவனின் மண்ணடியில்
கண்ணீரால் புதைகிறது
வங்கிகளின் இயக்கத்தில்
கடவுளாகி அருள்கிறது
நகரத் தெருக்களின் விளிம்புகளில்
பாதுகாப்பான பெட்டிகளில்
பாதுகாப்பற்று நிறைந்திருக்கிறது
நைந்திருக்கும் கிராம வீதிகளில்
சில்லரை ஒலிகளால் குழைகிறது
சிலரின் அங்கங்களில்
ஆபரணமாய் மிடுக்கிடுகிறது
சிலரின் அடிவயிற்றில்
நெருப்பாகி கொதிக்கிறது
பங்குசந்தையில்
மலையென நிமிர்கிறது
பின் மடுவென ஆழ்கிறது
எல்லாம்வல்ல இறையையும்
அருகிலும் தூரத்திலும்
அருள்தர பணிக்கிறது
உயிர்காக்கும் மருத்துவத்தில்
உயர்சிகிச்சையின் பூதாகரமாகிறது
மனிதநேயத்தை மதிப்பிழக்கச்
செய்கிறது
புனிதப் பயணத்திலும்
சொகுசுநடையிடுகிறது
நில்லாவுலகின் நிலைத்தது
எல்லாவகையில் வலுத்தது அது.

## ஊரை நெருங்குகிறேன்.

வாரத்தின் இறுதிநாளில்
சிறகுகள் முளைக்கிறது கால்களுக்கு
கிடைத்திருக்கும் விடுமுறையைத்
தாய்மண்ணில் கழிக்க
சுறுசுறுப்பாகிறேன்
தெருவின் நடுநிசியை
வல்லென்றுக் குரைத்துக்
கலவரமாக்குகின்றன தெருநாய்கள்
சுவர்க்கோழிகளின் செவிகுடையும்
சப்தம்
இருளின் பாதையைக்
கரடுமுரடாக்குகிறது
மேகங்களற்ற வானில்
தேய்கிற நிலவைச்சுற்றி
நட்சத்திரங்கள் மங்கிய
ஒலியால் வருந்துகின்றன
பருவமழையால் நிரம்பியிருக்கும்

ஏரியைக் கடக்கையில்
சில்லென்ற காற்று
காலையில் நீராட அழைக்கிறது
பிள்ளையார் வீற்றிருக்கும்
அரசமர இலைகளின் சலசலப்பில்
தூக்கம்கலைகிறது
சில பறவைகளின் கூடுகள்
மகன் வரும்வரை
உறங்காமல் காத்திருக்கும்
அம்மாவின் இரவு
அவள் சமைத்திருக்கும்
பதார்த்தங்களைப் போன்றே
விருந்தானது
தாழ்வாரத் திண்ணைமேல்
கையைத் தலைக்குவைத்து
ஒருக்களித்துப் படுத்திருக்கும்
அப்பாவின் கனவில்
எந்தன் வருகை திருவிழா உற்சவம்
குளிரையும் கொசுக்களையும்
பொருட்படுத்தாது
பேருந்து நிறுத்தத்தில்
கால்கடுக்க காத்திருக்கும்
நண்பர்களின் தோழமை
வாழ்தலின் சொர்க்கம்
காலைமுதல் மாலைவரை
ஊரிடமும் உறவுகளிடமும்
எவ்வளவு இயலுமோ அவ்வளவு
மகிழ்ந்து பழகியாகவேண்டும்
யாவற்றையும் கணக்கில்கொண்டு
ஊரை நெருங்குகிறேன்
வாழ்வை முடித்து
எமனோடுப் புறப்படத் தயாராகிறார்
பக்கத்துவீட்டுச் சிங்காரத் தாத்தா.

–

பொன்.தெய்வா.
ஐவேலி
விழுப்புரம் மாவட்டம்.



# தனஞ்செயன் கவிதைகள்

## 1. அந்த சாலையை

கடக்க முடியாமல்
தவித்திருந்தேன்
சக மனிதர்களின் மலத்தை
கையால் அள்ளிய காட்சிகளை
மனதிலிருந்து நீக்கமுடியாமல்
தவித்திருக்கிறேன்
விடுதியில் உணவை உண்டு
செரிக்காமல் தவித்திருக்கிறேன்
நாம் சாப்பிட்ட எச்சில் தட்டுகளையும்
சிந்திய உணவை
மேசைகளில்
துடைக்கும் மனிதர்களின்
முகங்களைக் கண்டு வேதனை
அடைந்திருக்கிறேன்
பேருந்து பயணத்தில் இரவு
தூங்க முடியாமல் விழித்திருக்கிறேன்
பல மணி நேரம் தூங்காமல்
வாகனம் ஓட்டும் ஓட்டுநரின்
துயரங்களைக் கண்டு துயரமடைந்து
பயணித்திருக்கிறேன்
செவிலியர்களின் கரங்களில்
பதிந்துபோகும் நோயாளிகளின்
ரத்தங்களையும்
கழிவுகளையும் பார்த்து
கடந்திருக்கிறேன்
அகதிகளின் ஆழமான
கருத்துரிமையை அறிந்திருக்கிறேன்
அவர்கள் நிலத்தின்
குரலையும் கேட்டு அழுதிருக்கிறேன்
இப்படி என் வார்த்தைகள்
எத்தனையோ
மனிதர்களைச் சுற்றிவந்தாலும்
நான் நினைப்பதெல்லாம்
துயரமான வேதனைகளை
அனுபவிக்கும்
இந்த மனிதர்களின்
ஒவ்வொரு நாளும்
ஒரு வேரைப்போலவே மலர்ந்து மகிழ்
வித்து மடிந்துபோகிறதே என அடிக்கடி
நினைத்திருக்கிறேன்.

## 2. பெண்

புரிதலின்றி வாழ்ந்துவிட்டேன்
உன் சக துக்கங்களை முழுமையாகப்
புரிந்து கொள்ளமுடியவில்லை
என்னால்
நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய்
ஒரு தியாகத்தோடு
நீ கோவில்
உன் கருவறையில் தான் பிரம்மா
சூட்சமமாய் தங்கியிருக்கிறான்
கடவுளுக்கே இடம் கொடுத்த புண்ணிய
உடல் நீ
இது வரை புரிந்து கொள்ளவில்லை
உன்னை
எத்தனை துயரங்களைத் தாண்டியும்
அழகான உன் புன்னகையை மட்டும்
பார்த்துக்கொண்டே இருந்துவிட்டேன்
புன்னகையின் ஓரத்தில் வடியும்
துன்பங்களைப் பார்க்கவில்லை நான்
துயரம் மிகுந்த உன் சிறகுகளை
கவனிக்கவில்லை
இனி சிறகை ஒடிக்க ஆசையில்லை
நான் புரிந்து கொள்ளும் முயற்சியில்
இன்னும் இருக்கிறேன்
நீயோ மன்னித்து ஏற்றுக்கொண்டே
அன்பின் லயத்தில் செல்கிறாய்

நீ பறக்கச் சிறகுகளுக்கு விடுதலை
தரலாம்
புரிதலற்ற என்னை
புரிதலாக மாற்றிவிடுவாய் என
நினைக்கிறேன்
எப்பொழுதாவது புரிந்து கொள்வேன்
உன்னை
தாய்மை என்றுமே புதிரானது
புதிரில் தான் இந்த உலகம்
இயங்குகிறது.

## 3. அழகான வெள்ளை இதயமும்

வெள்ளை இரத்தமும்
கருப்பு ரத்தத்தைக்
தனக்குள் அடக்கி
அழகுபார்க்கிறது
தன் தூய்மையான முகத்தில்
எழுதித் தீர்க்கும் வரிகளைச் சுமந்து
வேதனையோடும்
இன்பத்தோடும்
புத்தக உடலாக நீள்கிறது
எரிந்து சாம்பலாகி
ஆற்றலை வெளிப்படுத்தும்
ஒவ்வொரு பக்கத்திற்குள்ளும்
வெள்ளைத்தாளும்
கருப்பு மையும் விளையாடி மகிழ்ந்து
எடிட்டர்களோடு கருப்பு மை தன்னை
சரிசெய்து கொள்கிறது
வெள்ளைத்தாள் எப்பொழுதும் மேகம்
போன்று எழுத்தைப்பொழியும்
வெள்ளைத்தாளின் கற்பத்தில்
எத்தனையோ எழுத்துகள் மழைபோல்
பிறக்கிறது
மனிதர்களைப்போலப் பேசவும்
செய்கிறது
கணத்த இதயத்தோடு
காகிதங்கள் இசை குறிப்பின் தீராத
பக்கங்களாய் அசைகிறது.

## 4. பூக்களும்

குழந்தைகளும்
பெரு மகிழ்ச்சியில்
மலர்ந்து சிரிக்கும்
கணத்தில்
தெய்வீகம்
இறங்கிவருகிறது
நுண் நொடிகளில்
அந்த நொடிகளை
தவறவிட்டுக்கொண்டேதான்
இருப்போம்
அதுதானே இயல்பு
சிலிர்க்கச் சிலிர்க்க
தெய்வீகம் மகிழ
பதிலுக்கு ஒரு முத்தம் தரவேண்டாமா
அந்த பூவிற்கு.

## 5. பசி தீர்க்க பறந்து வந்தது

பறவைகள்
பரிதி தேய்ந்து
அதிகார வயிற்றில்
அமர்ந்து கொண்டது எடை
சுக்ராச்சாரியாருக்கு
ஒரு கண் குருடு
திருடப்பட்டது எடை
மக்களுக்கோ பசி
திரும்பிய பக்கமெல்லாம் இருள்
இருள் படிந்த கண்கள்
உறங்கவில்லை இதுவரை
இன்னும்

களவாடப்படுகிறது மண்
துளிர்க்கும் கண்களில் பிலாக்கணம்
அதிகார கண்களில் விளித்து
கிடக்கிறது வறுமையின் நிறமொன்று
செத்து வீழும் பறவையை
எண்ணிக் கொண்டேவா
இருக்கிறோம்.

தனிமையான படுக்கை அறையில்
ஒளிந்துள்ளது
ஒரு பாட்டில் நிறையக் காமம்
அறை நிறையத் தூக்கம்
பித்து தெளிய வைக்கும் அன்பு
காதலியின் வாசனை
அறையளவு வானம்
மனப் பறவை ஒன்று
தமிழில் தட்டச்சு செய்யக்கூடிய
செயலியும்
ஒரு தொலைப்பேசியும்
அடிக்கடி வந்து போகும் ஒரு
சிலரின்
தடயங்கள்
ஈர உதடு
அடிக்கடி முத்தம்
அறையின் நிர்வாணம்
ஆளற்ற சமுத்திரத்தில்
அலைகளின் ஏக்கத்தில்
நழுவும் நுரை வெடித்து
துக்கத்தைக் கொண்டாடுவது போல்
இருவரின் தனிமையில்
சில நேரத் துன்பம்...

--

ப. தனஞ்ஜெயன்
danadjeane1979@gmail.com
9751800333

# விடியலைத் தந்திடு

நிலம் எது
நீர் எது
கரைப்புரண்டோடுது
மேகம் பிளந்து
கனமழை தொடருது

புயல் அது
திசை எது
கரையைக் கடக்குது
காற்றின் வேகம்
வேரோடு சாய்த்தது

வீழ்வது
எழுவது
இயல்பானது
புரளும் வெள்ளம்
புரட்டிப்போட்டது

கரை எது
கடல் எது
காட்சி பிழையது
மேகம் குடிக்குது
பூமித் துடிக்குது

இருளுது
மிரளுது
விடைத்தெரியா பொழுதிது
சூழலும் பொழுதே
விடியலைத்தந்திடு!

–

பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்
6380704001



# வீறு கொண்டு எழு மனமே

பணத்தை தேடி மனதை பார்க்காத,
மனிதத்தை மருந்துக்கும் மதிக்காத,
மனிதநேயம் அற்ற மானிடர்களை கண்டு
வீறு கொண்டு எழு மனமே!!

விவசாயத்தை வேரறுக்க காத்திருக்கும் வேட்டைகாரர்களை,
விளைவித்த பொருட்களுக்கு விலை நிர்ணயிக்க விடாத,
விளைநிலத்தை மலடியாக்க நினைக்கும் மடையர்களை கண்டு
வீறு கொண்டு எழு மனமே!!

பெண்ணை பேடியாய் போகப் பொருளாய் பார்ப்பவரை,
பெண்ணீயம் பேசும் பெண்டிரே பெண்உரிமையை நசுக்கும் போது,
சமநிலை அளிக்காமல் பெண்ணை இரண்டாம் நிலைக்கு தள்ளுபவரை கண்டு
வீறு கொண்டு எழு மனமே!!

கொஞ்சி பேசியதும், விளையாடியதும் தமிழில்,
மனதுக்குள் தென்றலாகவும், உயிருக்கு மூச்சாகவும் இருந்த தமிழ்,
மற்ற மொழிகளை கற்பதும், கற்பிப்பதும் தமிழில்,
ஆங்கிலமே முதன்மை என்று கொடிபிடிக்கும் கொடூரர்களை கண்டு
வீறு கொண்டு எழு மனமே!!
வீறு கொண்டு எழு மனமே!!

நன்றி.

--

பத்ரிநாராயணன்,
228/201, சக்கராஜாகோட்டை தெரு,
இராஜபாளையம்- 626117.

# தமிழ்...

அகிலத்தின் பிறப்பிற்கு
முன்பே தோன்றிய
அன்னை மொழி...!!!

ஆரிய மொழிகளில்
கால் ஊன்றிய
அதிசயமான
முதன்மை மொழி...!!!

இலக்கணத்தால்
இனிமையை
தருவிக்கும்
முதுமை மொழி...!!!

ஈடில்லா இந்திய
மொழிகளுக்குள்
இமயமான
இனிமை மொழி...!!!

உலக மொழிக்குள்
தலை சிறந்து
விளங்கிய
அறத்தின் மொழி...!!!

ஊட்டம் தருவாயே
உலக மொழிக்கு
நீயும்-ஓர்
ஊக்கியான மொழி...!!!

எழில் கொஞ்சி
இதயத்தில்
கலக்குமோர்
எளிமை மொழி...!!!

ஏழு அதிசயத்திற்கும்
முன்பே தோன்றி
மொழிகளுக்கு
அதிசயமான மொழி...!!!

ஐம்பெரும் ஐச்சிறு
காப்பியமாம்-அதற்கு
அடையாளம் தரும்
காப்பிய மொழி...!!!

ஒலிகளின்
உச்சரிப்பில்
குறிலும் நெடிலும்
ஒன்றிய மொழி...!!!

ஓர் வரியில்
வர்ணித்தால்
தமிழ் நீ-மொழிகளின்
தாய்மை நீ...!!!!

--

அன்புடன்

ச.அருள் பிரசாத்,
B.Com, CMA, MDA, DTL
(GST Practitioner)
சிராங்குடி.



# ஏழை நரகாசுரன்....!

ஏழை வீட்டில் செய்த இனிப்பு...
இனிக்கவில்லை எதுவும் ...!
கடன் வாங்கி செய்தது....!?

தெருவெல்லாம் மத்தாப்பு
மனசெல்லலாம் பட்டாசு...
நாளைய பயம்....!?

தீபாவளி களிப்பு
சொந்தங்களிடம் மட்டும்...!
அன்புக்கு ஏங்கிடும்..
ஆயிரமாயிரம் அநாதைகள்
ஆதரவற்றோர் இல்லத்தில்...!

தீப ஒளி ஏற்றி
கடவுளுக்கு வழிபாடு...!
வாழ்வில் ஒளியின்றி..
வீதியில் பல குடும்பங்கள்...!?

விதவிதமாய் பலகாரங்கள்
வீடுகளில் சந்தோசம்...!
இட்லியாவது இன்று ....
கிடைத்துவிடாதா என்று..?
தெருவோர சிறுவர்கள்...!?

அணுகுண்டு வெடியும்....!
ராக்கெட் வெடியும்....!
நம் பலத்தை சொன்னதா..?
விண்முட்டும் விலைவாசியை
சொன்னதா என்பது மட்டும்....!
புரியவேயில்லை எங்களுக்கு..!?

ஆண்டுதோறும் தீபாவளி
வருகிறது...?

ஆனாலும் -
ஏழ்மை எனும் நரகாசுரனை.....
வீழ்த்தத்தான் முடியவில்லை -
எங்களாள்.....!?

–

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# இயற்கையோடு இணைந்து வாழ்வோம்

உலகில் இயற்கையோடு இணைந்து
வாழ்வோம்..
இயல்பாய் என்றும் தொடர்ந்து
வாழ்வோம்..

அனைத்து நோய்களுக்கும்
இயற்கையே மருந்து..
இயற்கையை மறந்தால் நோய்களே
விருந்து..

செயற்கை உணவினை மனதினில்
மறந்து
இயற்கை உணவினை தொடர்ந்தே
அருந்து..

நினைவில் பாரம்பரியம் மறந்து
விட்டோம்
உடலில் ஆரோக்கியம் இழந்து
விட்டோம்..

விளம்பர உலகில் இடம்பெற
வேண்டியே
கலப்பட உணவில் கலந்தே
போகின்றோம்..

துரித உணவில் நன்மைகள் இல்லை
தொடர்ந்து உண்டால் உடலில்
தொல்லை..

சாயம் உணவில் மாயம் கொள்ளும்
பாவம் உடலை நாளும் கொல்லும்..

விஞ்ஞான உலகிலே வித்தியாச
படைப்புக்கள்..
விசித்திர முறையிலே விநியோகம்
நோய்கள்..

எமது வீட்டுக்கு வீடு வாசல் படியே
வீட்டில் உள்ளோருக்கு நோயின்
பிடியே..

எமது உடலுக்கு உணவே உரமாகும்
அந்த உரத்திற்கு இயற்கை
வரமாகும்..

நல்ல உணவால் வாழ்க்கை தரமாகும்
அந்த தரத்தால் வாழ்வே சிறப்பாகும்..

வேடிக்கை என்னவென்றால் விலை
கொடுத்து
வேதனைகளை நாமே வாங்கிக்
கொள்கிறோம்..

–

சா. நாகூர் பிச்சை,
திண்டுக்கல்

# ஆங்கிலத்தில் மட்டுமல்ல – வாசிப்பை நேசிப்போம்.



இளவரசி இளங்கோவன்

சுயமுன்னேற்றம் மற்றும் தனி நபர் வளர்ச்சி, தொழில் வளர்ச்சி முன்னேறுவது எப்படி இது போன்ற விடயங்களை யோசிக்கும் பொழுதும் அது பற்றிய புத்தகங்களை யோசிக்கும் பொழுதும் எப்பொழுதும் எல்லோரும் முன்வைக்கும் நூல்கள் அனைத்தும் பெரும்பாலும் ஆங்கில நூல்களாகவே இருப்பதையும் ஆங்கில எழுத்தாளர்கள் மட்டுமே இவை அனைத்தையும் அறிந்து இருப்பது போலவும் ஒரு மிகப்பெரிய மாயை நம்மவர்களிடையே தொடர்ந்து வருகிறது.

இதற்காக ஆங்கில எழுத்தாளர்களையும் ஆங்கிலப் புத்தகங்களையும் குறைத்து மதிப்பிட்டு குறை சொல்ல முன்வருகிறேன் என்று பொருள் கொள்ள கூடாது. மாறாக அதற்கு இணையாக சில சமயங்களில் அதற்கு முன்னோடியாகவும் மேலாகவும் தமிழிலும் நூல்களும் எழுத்தாளர்களும் உள்ளனர் என்பதைத்தான் நான் இங்கே சொல்ல வருகின்றேன்.

அந்த வகையில் மனிதவள மேலாண்மை, ஆளுமை மேம்பாடு மற்றும் நிதி முதலீடுகள் போன்ற துறைகளில் நிபுணராக உள்ளவர் சுயமுன்னேற்றம் பங்குச்சந்தை உணர்ச்சிகளை கையாள்வது பற்றிய நுண்ணறிவு, நேரத்தை எவ்வாறு நேரமேலாண்மை விற்பனை தலைமைப் பண்பு மற்றும் சுய ஆளுமை மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை பற்றிய புத்தகம் எழுதிய ஆகச்சிறந்த தமிழ் எழுத்தாளர், பயிற்சியாளர் சோம வள்ளியப்பன் அவர்களைப் பற்றித்தான் என்னை கவர்ந்த நான் வியப்புக்கு ஆளான பல்வேறு விடயங்களை இக்கட்டுரையின் வாயிலாக நீங்களும் அறிந்து கொள்ள முன்வைக்கின்றேன்.

எழுத்தாளர்களைப் பற்றி நிறைய தேடல்களை செய்து கொண்டிருக்கும் வேளையில் எதேச்சையாக நான் கண்டறிய நேர்ந்த ஒரு மிகச் சிறந்த எழுத்தாளர் தான் சோம வள்ளியப்பன் அவர்கள். அவருடைய சுயமுன்னேற்ற நூல்களையும் அவர் எழுதிய "இட்லியாக இருங்கள்" என்ற புத்தகமும் மிகவும் சுவாரசியமாக கவரக்கூடியதாக இருந்தது. அவர் தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் 45க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

சோம வள்ளியப்பன் தமிழகத்தின் அனைத்து முன்னணி பத்திரிக்கை இதழ்களிலும்

தொடர்ந்து கட்டுரைகளை எழுதுபவர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கூட மனிதவளம், பொருளாதாரம், பணம் பங்குச்சந்தை, நேர மேலாண்மை, ஆளுமை மேம்பாடு போன்ற பல்வேறு கருத்துக்களை சொல்லி வருபவர்.

தமிழகம் முழுவதும் இருந்தும் பல்வேறு கல்லூரிகள்,தன்னார்வ நிறுவனங்கள், பல்வேறு தொழில் நிறுவனங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு பேசவும் பயிற்சி கொடுப்பதற்காகவும் அழைக்கப்படுபவர்.

பொருளாதாரம் எம்பிஏ பிஜேபியும் படித்திருக்கும் சோம வள்ளியப்பன் பெப்ஸி வால்போல் டாக்டர் ரெட்டிஸ் பவுண்டேஷன் நவியா உள்பட பல்வேறு நிறுவனங்களில் 30 ஆண்டுகள் மனிதவளத் துறையில் பணியாற்றி விட்டு தற்போது மேன்மை மேனேஜ்மெண்ட் கன்சல்டன்சி மேலாண் இயக்குனராக சென்னையில் பணிபுரிந்து வருகிறார்.

இவர் எழுதிய ஒவ்வொரு புத்தகமும் அதன் தலைப்பே வாசிக்கவும் மிகவும் உற்சாகமூட்டுவதாகவும் தான் இருக்கிறது. "வீட்டுக் கணக்கு", "இட்லியாக இருங்கள்"," சிறந்த நிர்வாகி ஆவது எப்படி"," காலம்"," தள்ளு", "உலகம் உன் கையில்", "காதலில் இருந்து திருமணம் வரை", "எல்லோரும் வல்லவரே", "அள்ள அள்ள பணம்", "பங்குச்சந்தை அடிப்படைகள்", "உறவுகள் மேம்பட", "உஷார் உள்ளே பார்" என்று ஒவ்வொரு தலைப்பும் மிகவும் வித்தியாசமாகவும் சுவாரசியமாகவும் நிறைய புத்தகங்களை வெளியிட்டு இருக்கிறார்.

தலைப்புகள் மட்டும் சுவாரசியமானது அல்ல உள்ளே இவருடைய எழுத்து ஆதாரப்பூர்வமான ஆய்வின் அடிப்படையில் பல்வேறு விடயங்கள் தரவுகளோடு விவாதிக்கப்பட்டு அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்படுவது தான் இவருடைய எழுத்தில் வெற்றிக்கும் அது நம்மை கவர்ந்து இழுப்பதற்கும் காரணமாக நான் உணர்கிறேன். இதுவரை இவருடைய சிறந்த நிர்வாகி ஆவது எப்படி மற்றும் இட்லியாக இருங்கள் ஆகிய இரண்டு புத்தகங்களை நான் வாசித்திருக்கிறேன் அந்த சிறந்த நிர்வாகி ஆவது எப்படி என்ற புத்தகத்தில் அவர் பெரும்பாலும் அனைத்து விடயங்களையும் கொண்டுவர முயற்சி செய்திருக்கிறார் மூன்றாவதாக தற்போது மேனேஜ்மென்ட் குரு கம்பன் என்ற அந்த புத்தகத்தை வாசித்து வருகிறேன்

காலம் அனைவருக்கும் பொதுவானது தான். எல்லோருக்கும் 24 மணி நேரம் தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதை எப்படி திறம்பட பயன்படுத்துவது அல்லது அதை நிர்வகிப்பது என்பது மட்டும்தான் சாதனையாளர்களுக்கு, சாதாரணமானவர்களுக்கும் உள்ள வேறுபாடு. இவர் எழுதிய "நேரத்தை உரமாக்கு" என்னும் இந்நூல் நேர மேலாண்மையை சுவையாகவும் தகுந்த உதாரணங்களுடன்

கற்றுத்தரும் ஒரு அருமையான நூல்.

"உறவுகள் மேம்பட" என்ற இவரது இன்னொரு நூல் மனிதர்களை ஈர்க்கும் வித்தையை நெருக்கமான சம்பவங்கள் அழகான கதைகள் ஆழமான உதாரணங்கள் மூலம் நமக்கு கற்றுத் தருகிறது.

"எல்லோரும் வல்லவரே" சாதனையாளர்களுக்கு சாத்தியமானவை அனைத்தும் சாதாரணமானவர்களுக்கும் சாத்தியப்படும். அவர்களைப் போலவே நீங்களும் ஒரு வல்லவர் தான் இதை நீங்கள் உறுதியாக நம்ப தொடங்கும் பொழுது உங்கள் ஆளுமை பல மடங்கு பிரகாசிப்பதை நீங்களே உணரலாம் என்று கூறும் நூல். வரலாற்றில் இடம் பிடித்திருக்கும் அனைத்து வரலாற்று சாதனை அவர்களுக்கும் உள்ள அடிப்படையான ஒற்றுமை அவர்களிடம் இருந்த உறுதிதான். இந்த மன உறுதியை சாதாரணமான நாமும் சரித்திரம் படைப்பவர்களாக மாறுவதற்கும் அந்த உறுதி மட்டுமே வேண்டும். அதைத்தான் இந்த "உறுதி மட்டுமே வேண்டும்" என்ற இந்த புத்தகம் நமக்கு சொல்லிக் கொடுக்கும் ஒரு உந்து சக்தியாக உள்ளது.

உங்கள் கனவுகளை விரிவாக்குவது நிறுத்திக் கொள்ளாமல் அந்த கனவுகளை நிறைவேற்றுவதற்கான சூட்சுமங்களையும் சொல்லிக் கொடுக்கிறது இந்த உறுதி மட்டுமே வேண்டும் இப்படி ஒரு அவருடைய புத்தகங்களைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்.

சம்பாதிக்க தெரிந்த அளவுக்கு சம்பாதிக்க தெரிந்த பணத்தை சரியாக நிர்வகிக்க பலருக்கு தெரிவதில்லை. இனியாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்றுகூட நினைப்பதில்லை. இதில் படித்தவர், படிக்காதவர், உயர்ந்த பதவியில் இருப்பவர், சாதாரண ஊழியர் போன்ற வேறுபாடுகள் ஏதுமே இல்லை. உண்மையில் பணத்தை சம்பாதிப்பது அத்தனை கடினமான விடயமே கிடையாது, நம்மிடம் இருக்கும் சிறு அளவு பணமே பெரும் பணத்தை சம்பாதித்து விடும். அதற்கான எளிமையான வழிமுறைகளை சொல்லும் புத்தகம்தான் "பணமே ஓடிவா"

இப்படி தமிழிலும் ஆகச்சிறந்த சுயமுன்னேற்ற நூல்களையும் அன்றாடம் பயன்படும் நடைமுறைக்கு ஏற்ற வழிமுறைகளையும் சொல்லிக் கொடுப்பதற்கு ஒரு ஆகச் சிறந்த எழுத்தாளர் சுயமுன்னேற்ற ஊக்குவிப்பவர் மேலாண்மை குரு இருக்கிறார் என்றுதான் எனக்கு இவரை படித்த பிறகு தெரிந்தது.

தற்போது இவரை அவருடைய யூடியூப் சேனல் வழியாக நான் பின் தொடர்ந்து வருகிறேன். அன்றாடம் காலத்திற்கு ஏற்ப மிக அருமையான விடயங்களை நடைமுறைக்கு ஏற்றவாறு சொல்லித்தருகிறார். மனம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இருக்கிறது. நிறைய விடயங்களை அன்றாட வாழ்வை இன்னும் சுலபமாக்க

வேண்டும், மேம்படுத்த வேண்டும், நேரத்தை சரியாக கையாள வேண்டும் என்று நினைப்பவர்கள் இன்று நாம் வாழும் வாழ்க்கையில் இருந்து நிச்சயமாக ஒரு படி உயர்ந்து உயர்வான ஒரு இடத்தை அடைய வேண்டும் என நினைப்பவர்கள் நிச்சயமாக சோம வள்ளியப்பனை வாசிக்கலாம். பின்பற்றலாம். பின் தொடரலாம்.

–
நன்றி
இளவரசி இளங்கோவன்

---

# படைப்புகளும் படைப்பாளிகளும்

பகலின் வெளிச்சத்தில்
பார்வையிலிருந்து
மறைந்து போவது
நட்சத்திரங்களே
அன்றி
வானமல்ல...

# கோள்கலன் எது

அலைபேசிகளாக
உடல்களிருக்க
சிம்கார்டுகளாக
மதங்களிருக்க
நடு மைய
கொள்கலன்
என்னவோ
நம்பிக்கை மட்டுமே

# விழிகளை மூடி விடியலை தேடி

கையிலிருக்கும்
காலப்பெட்டகத்தை
கண்திறந்து
காணாமல்
விழிகள்
மூடியலைகிறோம்
விடியல் வேண்டி...



நேசமுடன் ஈசு

# கடிகாரத்தின் அதிகாரத்துக்கு அடிமையாகிவிட்ட கடமைவாதிகளே...

என்றாவது
சூரியனின் நகக்கீறலில் சிவந்த வானத்தில்
மிதந்ததுண்டா ?

நுரைக்க நுரைக்க உங்களைக் கரைத்து
விடியலுக்கு முலாம் பூசியதுண்டா ?

ஒளி ரேகையில் இருந்து நழுவி
நிலத்தைத் தொடும்
பனித்துளியில் உறைந்திருக்கிறீரா ?

ஆற்றின் கதகதப்பைத் தொலைத்த
கூழாங்கல்லுக்கு
உள்ளங்கைக் குளுமையைத்
தந்திருக்கிறீரா ?

இரை கவ்வி
பொழுதோடு கூடு திரும்பும்
பறவை முன்
தோற்றுப் போனதுண்டா ?

எதுவும் இல்லை எனில்...

நேரத்தின் அலமாரியில்
அழகழகாய்
வேலைகளை அடுக்கி வைத்து வாங்கிய
நற்சான்றிதழின் பின்பக்கத்தில் அச்சேறிய
வாழ்வின் பொத்தல்களை
இப்போதாவது கவனியுங்கள்
கடமைவாதிகளே...

–

திி.கலையரசி.



அட்டைப்பட ஓவியம்:

இரா.மதுவர்ஷினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.

# உன்னில் நான்

கனவில் மீண்டுமொருமுறை உன்னோடு உரையாடி விட வேண்டும்...

அதே அன்பும் காதலும் இப்போதும் இருக்கிறதா என்று வினவி விட வேண்டும்...

நேரில் கேட்கும் தைரியம் இல்லை !!!

தொலைந்துபோகும் உன்னை
தேடித் திரிவதில் தான்
எத்தனை பெரிய ஆர்வமெனக்கு?

என் குரலுக்குச் செவிசாய்க்கும் அந்த புன்னகையையை
மீண்டும் ஒரு முறை பார்த்துவிடவே,
என் கண்ணாடிப் பாதரசமும் ஏங்குகிறது..!

உன் தொலைந்த அதே சாயலை ஒவ்வொரு உயிரிடத்திலும் தேடித்திரியும் என் பைத்தியக்காரத்தனத்தையா காதல் என்பது?

உன் முரட்டுப் பிடிவாதத்திலும்,
முன் கோபத்திலும் என் காதல் திணறும் வேளையிலெல்லாம்
உன் நினைவுகள் மட்டும் மறுதலிக்காமல் மீழ்வதையா காதல் என்பது?

என் ஒவ்வொரு விடியலும் உன்னோடான கனவுகளுடனே விடிவதை எப்படி இல்லையென மறுப்பேன் ?

தொலைவதுமல்ல,
தேடுதலுமல்ல காதல்.,
யுகங்களாய் நினைவில்
உயிர்த்திருப்பபதே !!!



–
கவிமலர் த. சரண்யா,
கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு மாவட்டம்.
கேரளா.

# அவள் ஒரு காவியம் (மனைவி)

மாதம் அவளுக்கு வலி
கொடுக்க
வளையல் சத்தம் கூட
அவளுக்கு
எரிச்சலூட்டும்....

அவள் அடி வயிற்றின்
அலறல்
சத்தத்தையும்
இரு கை கொண்டு
அழுத்தி
கொள்வாள்....

நிற்காமல் சுற்றி
கொண்டிருந்த
அவளின் கால்களை
இன்று
சுருட்டி கொண்டு
படுத்துக்படுத்துக்
கிடப்பாள்...

வீட்டையே அதிகாரம்
செய்த அவளின்
குரல் இந்த நாளில்
மௌனமாகிவிடும்.....

இப்படி இருந்தும் அவளின்
வலிகளை வெளிகாட்டிக்
கொள்ளாமல்
வேலைகளை
செய்திடுவாள்...

உன்னால் அவளின் வலியை
பகிர்ந்து கொள்ள
முடியாவிட்டாலும்
அவளின் உணர்வுகளை
புரிந்துகொள்......

அவள் எப்படி இருந்தால்
என்ன
என்று விழி
மூடி தூங்காதே
விழித்துகொள்
பெண்மையை
உணர்ந்துகொள்.....

உன் தேவைக்கு
மட்டும் அவளின்
தசைகளை
சுவாசம் கொள்ளாமல்
அவளை தேவதையாக
பார்த்து
அவள் மீது
பாசம் கொள்....

ஏனென்றால்
அவளே
உன் எதிர்காலம்
என்று
மறந்துவிடாதே....

பெண்மையை
போற்றுவோம்....

என்னவளின்
வருகைக்காக....

–

S.S. கார்த்திக், DCA, DME,
உள்ளிக்கோட்டை.

# பூஞ்சோலை பொன்னுத்தாயி...

இயற்கை எழில் கொஞ்சும்
அந்த கிராமத்தின் பெயர் தான்
பூஞ்சோலை. பெயருக்கு
ஏற்றாற்போல சாலையின்
இரு ஓரங்களிலும் வரிசையாய்
மரங்கள் அணிவகுத்து
வரவேற்பது போன்ற காட்சி.
அதை ரசித்துக் கொண்டே
சென்றதில் பயண களைப்பே
தெரியாமல் நமது வாகனம்
பூஞ்சோலை கிராமத்தினுள்
நுழைந்தது.

டிரைவர் தம்பி வண்டியை
ஓரமா நிறுத்துப் பா... என்றார்
"வி "டிவியின் அதாவது (வில்லேஜ்
டிவி)
தொகுப்பாளர் சரவணன்.

சிறிய ஓட்டு வீடு தான்.
வீட்டின் வலப் பக்கத்தில்
சிறிய மாட்டுத் தொழுவம்.
நாய் ஒன்று குரைத்துக் கொண்டே
ஓடி வந்தது.

அந்த நாயை அதட்டிக் கொண்டே
நீங்க எல்லாம் யாரு.... எனக்கேட்டாள்
ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்.

அம்மா வணக்கம்
உங்க பேரு பொன்னுத்தாயி தானே
என்றார் சரவணன்.

ஆமா..... நீங்க யாரு? என்றாள்
பொன்னுத் தாயி.

அம்மா.... நாங்களெல்லாம்
"வி "டிவியில் இருந்து வருகிறோம்
உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்
என்றார் சரவணன்.

எங்கிட்ட யா.... என்ன...
சொல்லுங்க என்றார் பொன்னுத்தாயி.

அம்மா...... ஒவ்வொரு மாதமும்
ஏதாவது ஒரு கிராமத்திற்குச் சென்று
சாதனைப் பெண்கள் என்ற
தலைப்பில் சிறந்த பெண் ஒருவரிடம்
பேட்டி எடுப்போம்.
அதை நம்ம "வி" டிவி - ல
ஒலிபரப்புப் பண்ணுவோம்.
இந்த மாதம் உங்களைப் பற்றி
கேள்விப்பட்டோம். அதான்
பேட்டி எடுக்க வந்திருக்கோம்
என்றார் சரவணன்.

ஓ.... பேட்டியா... அதென்னப்பா?
எனக்கு ஒன்னும் தெரியலயே....
என்றாள்
பொன்னுத்தாயி.

நான் கேட்குற கேள்விக்கு நீங்க
பதில் மட்டும்
சொல்லுங்கம்மா....போதும்
என்றார் சரவணன்.

கேளுங்க.... என்றார் பொன்னுத்தாயி

உங்களுக்கு எத்தனை குழந்தைகள்
அம்மா.... எனக் கேட்டார் சரவணன்

அத ஏன் கேட்குறீங்க....
அஞ்சு பொம்பள புள்ளைங்க
அஞ்சாவது புள்ள பொறந்ததும்
அவரு
மாரடைப்புல இறந்துட்டாரு.
(கொஞ்ச நேரம் அழுத பின்)
காரியம் முடிந்ததும் உறவுக்காரங்க
எல்லாம்
பிள்ளைகளைப் படிக்க
அனுப்பாதே, வேலைக்கு
அனுப்புன்னு சொன்னாங்க.
ஆனா நான் விடல
அஞ்சு பேரையும் நல்லா படிக்க
வைச்சுட்டேன்.
இந்தா இவபெரியவ ராஜி
காலேஜ் முடிச்சிட்டு வேலைக்குப்
போறாள்.
இரண்டாமவளும் காலேஜ் படிக்கிறா.
இவளுக்கு விளையாட்டு தான்
எப்பவும் ஓட்டப் பந்தயம் தான்
மற்ற மூணு பேரும் ஸ்கூல்ல
படிக்கிறாங்க.
புவனாவ ஸ்கூல்ல டீச்சரெல்லாம்
ரொம்ப
பாராட்டுவாங்க. உங்க பிள்ளை
புவனா எப்பவுமே ஓட்டப் பந்தயத்துல
முதல் பரிசு தான் வாங்குறான்னு
பாராட்டுறாங்க. எனக்கென்ன தெரியும்
அத பத்தியெல்லாம்.... என்றார்
பொன்னுத்தாயி.

பரவாயில்லை அம்மா...
உங்களைப் போலவே உங்க
பிள்ளைகளையும் திறமையாத்தான்
வளர்த்திருக்கீங்க.... என்றார்
சரவணன்.

என்னமோ தம்பி இரண்டாவது
பொண்ணுக்குத் தான்
எங்கேயோ போய் விளையாடினா
பெரிய பெரிய பரிசு எல்லாம்
கொடுப்பாங்களாம்.
அதற்கு பயிற்சிக்கு வேற
போகணுமாம்.
எனக்கு அந்தளவுக்கு வசதியில்லை.
கிராமத்தில்
இருந்து வெகு தொலைவிற்கு
எல்லாம்
அனுப்புறது கொஞ்சம் சிரமந்தன்.
அதான் எங்கும் அனுப்பல தம்பி
அது மட்டுமல்ல என்னை மாதிரி
இன்னும்
எத்தனையோ பெற்றோர்கள்
பிள்ளைகளுக்குத் திறமை
இருக்கும் வாய்ப்புகள்
கிடைக்கவில்லையே என்று
ஏங்கிக் கொண்டுதானிருக்கின்றனர்...
என்றார் பொன்னுத்தாயி

கவலைப்படாதீங்கம்மா....
திறமையான பிள்ளைகளுக்கு
வாய்ப்புகள் தேடி வரும்...
இதற்காகத்தான் இந்த "வி”
டிவி செயல்படுகிறது.
நன்றி அம்மா ... என்றார்
சரவணன்

தேனீர் பருகிய பின்
அங்கிருந்து விடைப் பெற்றனர்
டிவி குழுவினர்.

அடுத்த நாள் மாலை 6 மணி
வணக்கம் நேயர்களே

இது உங்கள் "வி" டிவியின்
கிராமம் தேடி என்ற நிகழ்ச்சியின்
மூலம்
இம்மாதம் சாதனைப் பெண்
பட்டியலில் இடம் பெறுவது
பூஞ்சோலை பொன்னுத்தாயி
என்ற சாதனைப் பெண்,
வீரப்பெண், பாரதி கண்ட
புதுமைப்பெண்
என்றே சொல்லலாம்.
இதோ உங்களுக்காக அவரின்
பேட்டி.....

அம்மா.... அம்மா....
இங்க வாம்மா...
நீ டிவியில தெரியுற வந்து
பாரும்மா.... என்றாள் ராஜி.

மாடுகளுக்கு வைக்கோல் அள்ளிப்
போட்டுக் கொண்டிருந்த
பொன்னுத்தாயி
ஓடி வந்தாள் டிவி முன்

என்ன நேயர்களே
எல்லா தொலைக்காட்சியிலும்
இன்று பரப்பரப்பாக ஒலிப்பரப்பாகி
கொண்டிருக்கும்
செய்தி, ஒலிம்பிக்கில்
சாதனைப் படைக்கும் பெண்களை
மட்டுந்தான்.
ஆனால் நம் "வி "டிவி
நமது கிராமத்தில் சத்தமில்லாமல்
சாதனைப் படைத்துக்
கொண்டிருக்கும்
பெண்களை உங்கள் முன்
நேரிடையாக பேச வைத்து
அவர்களது திறமைகளை
வெளிக்கொணர்கிறது .
தங்களுக்குள்ளேயே
திறமைகளைப் புதைத்துக்
கொண்டும், வாய்ப்புகளின்றியும்
தவிக்கும் பெண்களுக்கு ஒரு
தன்னம்பிக்கையை
ஏற்படுத்துவற்காக இந்த
நிகழ்ச்சி ஒலிப் பரப்பப்படுகிறது.
இன்னும்
எத்தனையோ பொன்னுத்தாயிகள்
தங்கள் பிள்ளைகளுக்கென
ஒரு அடையாளத்தைத் தேடித் தர
பாடுபாட்டுக் கொண்டிருக்கின்றனர்.
இவர்களுக்கு உறுதுணையாக
இருப்பதே "வி " - டி வியின்
கடமையாகும்.

"பெண்களைப் போற்றுவோம்"
"கண்களாய் காப்போம்"
என கூறி மீண்டுமொரு
சாதனைப் பெண் நிகழ்ச்சியில்
சந்திக்கும் வரை
உங்களிடமிருந்து விடைப்
பெறுவது உங்கள்
சரவணன்
நன்றி வணக்கம்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு

அம்மா..... வணக்கம்
நாங்கள் ஸ்போட்ஸ் அகாடெமி
என்ற அமைப்பில்
இருந்து வருகிறோம்.
"வி" டிவியில் உங்கள்
பேட்டியைக் கண்டு
உங்களுக்கு உதவ
முன்வந்துள்ளோம்.

திறமைக்கு என்றுமே
மதிப்பு உண்டு.
உங்கள் மகள் புவனாவிற்கு
விளையாட்டுப் பயிற்சிக்கு
தேவையான அத்தனை
உதவிகளையும் செய்து
மாநில அளவில் வெற்றி பெற
செய்கின்றோம் என்றார்
அகாடெமி அமைப்பின்
தலைவர் பாஸ்கரன்.

செய்வதறியாது... ஆனந்தக்
கண்ணீர் மல்க இருகரம்
கூப்பி வணங்கி உதவியை
ஏற்றுக் கொண்டார்
சாதனைப் பெண்
பொன்னுத்தாயி....

முற்றும்

–

## மு.ஜெரோஷா,
திருப்பூர்.

---

தாயும் சேயும்
நான் உணர்கிறேன்
இப்படி,
பிறந்த பிறகு
தாய்க்கும் சேய்க்கும்
புரிதல் புரியாத புதிர் என்றும்,
கையால் வயிற்றை தழுவி
வயிற்றில் வாகாய் அமர்ந்துகொண்ட
சிசுவிடம் மெதுவாய்
அம்மா பேச தொடங்க
வயிற்றில் உறங்கும் சிசுவோ
நெளிவு சுழிவால் பதில்கூற
பசித்தால் ஒரு நெளிவு
தாகித்தால் ஒரு நெளிவு
இப்படி அவர்களின் உரையாடல்
பலவிதமாய் பாசமாய்
ஆச்சரிய புரிதலாக இருக்கும்...
அம்மாவின் மனநிலைதான்
அந்த சிசுவிற்கும் பிறக்கும்வரை...
அது இன்பமோ துன்பமோ
ஆனால் பிறந்த பிறகு,
இருவரின் மனநிலை வேறு
அம்மாவை சொல்லால் செயலால்
அழ வைத்து வருத்தம் சிறிதும்
இல்லாமல் சிரித்து நடைப்போடும்
அளவிற்கு மாற்றமானது,
இதில் அம்மாவின் எல்லை இல்லா
அன்பு எண்ணிக்கொள்வது
ஒன்றுதான்... பிறக்கும் முன்பே
நம்மை மதிக்கும் சொல் கேட்கும்
நம் குழந்தை, பிறந்த பிறகு
சிறப்பாய் நம்மை கவனித்து
பாதுகாக்கும் என்று தான்...

–

## மெகர்பான் இப்ராஹிம்,
கரிசவயல்

# குழந்தையும் தெய்வமும்

ஒன்றென படித்திருந்தாலும்
கோவிலின்
உண்டியலை மட்டும் நிரப்பி
செல்வோரை
வைத்த கண் வாங்காமலே
பார்த்துக்கொண்டிருக்கின்றன...
பசியோடு தாய் மடியில்
அமர்ந்திருக்கும் குழந்தைகள்!
***

இன்பத்தைப் பற்றி எழுத
நினைக்கும் போது
பேனாவின் மை தீர்ந்து போகிறது...
துன்பத்தைப் பற்றி எழுத
நினைக்கும் போது
கற்பனை தீர்ந்து போகிறது!
**

கோடைகாலத்தில் மழை பெய்கிறது
மழைக்காலத்தில்
அனல்காற்று வீசுகிறது,
காலமும் மாறிப் போனது...
மனிதர்களைப் போல!
**

இப்போதெல்லாம்
எந்த புயலுமென்னை
அச்சமூட்டுவதில்லை...
உன் மௌனத்தை
தாங்கிக் கொண்ட பின்னொரு
நாளில்!
**

காகிதக் கப்பலோடு வரவேற்கிறார்கள்
சிறுவர்கள்
ஆனந்தத்தோடு
வரவேற்கிறார்கள் விவசாயிகள்,
குடையோடு வரவேற்கிறார்கள்
வயதில் முதியவர்கள்
கண்ணீரோடு வரவேற்கிறார்கள்
ஓட்டைக்குடிசையில் வசிப்பவர்கள்,
புன்னகையோடு வரவேற்கின்றன
மரங்கள்...
மழையை வரவேற்பதற்கு
நேரமில்லை
மழையாகிவிட்ட எனக்கு!
**

ஆதரவற்றவர்கள்
அனைவரும் கடவுளின்
பிள்ளைகளாம்,
அப்பப்பா இந்தியாவில்
மட்டும் எத்தனை குழந்தைகள்!
***

பிள்ளைகளுக்காக
ஒரு கையில் பட்டாசுகளையும்
மறு கையில் புத்தாடைகளையும்
சுமந்த படி
பேருந்துக்காய்
காத்திருப்பவனின் பாசத்தை
தாமதப்படுத்திக் கொண்டிருக்கும்
பெருமழை,
இப்போது தொடர்ந்து
கொண்டிருந்தது...
அவன் கண்களில்!

–

மு.முபாரக்,
+91 8072600090



# பிரிவின் வலி

அன்பே..

உன்னை என் உடமையவளாக
உணர்கின்றேன்.. காரணம் கேட்டால்
பதில் இல்லை என்னிடம்...

புரிகின்றது எனக்கு
நான் நினைப்பது தவறு என்று..

ஆனால் முடியவில்லை ...

உன் விழி என்னும் தூண்டிலில்
சிக்கிய புழுவாக துடிக்கிறேன்...

உன் நினைவுகள் என்னும் வலையில்
சிக்கிய மீன் போல் மீள முயன்று.
அதில்..
மாண்டு தான் போகின்றேன்...

உன்னை காணும் ஒவ்வொரு
நொடியும் புயலில் சிக்கிய ஓடம்
போல் செல்லும் பாதை தெரியாமல்
தொலைந்து போகின்றேன்...

உன் நினைவு என்னும் நிகழ்வு
தொடுக்க ஒரு நொடி போதும்..

மறக்க நினைக்கும் பொருட்டு என்
ஆயுளும் போதாது கண்ணே..

என் செய்வேன்...
நீள்கிறது என் விசும்பல்..

தெளிந்த நீரோடையாம் என்
சிந்தனைகள்..

இன்று ஆழ்பெறும் உன் நினைவின்
சுனையாக மாறிப்போனது ஏனோ..?

வலிக்கிறது கண்ணே... காயம் இன்றி
முதல் முறையாக...

உன் முகம் பார்த்து
ஒரு நொடி போவது ஒரு யுகம்
கடப்பது போல் உணர்கின்றேன்..

நெஞ்சம் முழுதும் பாரம்.. வாய்விட்டு
அழவும் முடியவில்லை... மனம் விட்டு
சிரிக்கவும் முடியவில்லை...

என்ன இது புது வித உணர்வு...?
மரண வேதனை என்று கேட்டது
உண்டு..
உணர்கின்றேன் இன்று.. உந்தன்
வழியில்...

எளிமையாக சொல்லிவிட்டாய்...
முடியாது என்று... அனுதினமும்
ததும்புகின்றேன் வெற்று பானையில்
நிரம்பிய கானல்நீராய்...

காட்சி பொருள் ஆனதோ என்
மனசாட்சி...
என் மூளை சொல்வதை கேளாது
விம்மி துடிக்கின்றது...

என்னை நீ புறம் தள்ளும் ஒவ்வொரு
கணமும்.. ஏனோ நெருப்பில் விழுந்த
விட்டில் பூசியாய் பரிதவிகின்றேன்...

ஏன் இந்த விசும்பல் ...

ஏன் இந்த புலம்பல்...

புரியவில்லை..
மனம் சமாதானம் ஆக மாறுகிறது...
என்னையும் இயல்பாக இருக்க விடாமல்..
தானும் இயல்பாக இல்லாமல் பரிதவிகின்றது....

மீண்டு விடுவேன்...
வெகு சீக்கிரம்...
நம்பிக்கை என்னும் துடுப்பை கொண்டு..

உணர்வாய் நீ ஒருபொழுது்...

ஆனால் அந்த தருணம் எனதாக இருக்கும்...

நிச்சயம் கண்ணே...

அந்த தருணம் எனதாக இருக்கும்...

--

கவிபாரதி. சதிஷ்,
விருதை.

---

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine